# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1775 - 2012 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2012.09.07

*1775 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1318 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1323 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ரணவிரு சேவா அதிகார சபை (திருத்தம்) சட்டமூலம் 2012, யூலை மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்-யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# பதவிகள் — வெற்றிடம்

## கலேவெல பிரதேச சபை

மத்திய மாகாண சபையின் அரச சேவையின், கலேவெல பிரதேச சபையில் நிலவும் பின்வரும் III ஆம் வகுப்புப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டோரிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

| | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 01. | வீதித் தொழிலாளர் | 01 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்படக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |

02. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 11,730 - 10 × 120 - 10 × 130 - 10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 ( 4 ஆவது சம்பளப் படியேற்றத்துக்கு முன்னர் தகுதிகாண் தடை உண்டு) (பொது நிருவாக சுற்றறிக்கை 06/2006 (iv) பீ. எல். 1 - 2006 ஏ).

03. **பொதுவான தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரச சேவையில் உள்ளோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது) ;

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னருள்ள 03 வருடங்களுக்குக் குறையாத காலம் கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (வாக்காளர் பதிவு இடாப்பு அல்லது பிரதேச செயலாளரது கையொப்பத்துடனான உறுதிச் சான்றிதழ் அதனை உறுதி செய்தல் வேண்டும்) ;

(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்படாதவராய் இருத்தல் வேண்டும் ;

(vi) ஏற்கனவே கலேவெல பிரதேச சபையில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் ;

(vii) விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

4. **ஆட்சேர்ப்பு முறை**.- கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்**.-

(i) இப் பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதிக்கப்பட்டவாறு விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்துக்கு நிதி செலுத்துதல் வேண்டும் ;

(ii) பதவி 03 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்தைக் கொண்டது ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணையும் காலத்துக்குக் காலம் விதிக்கும் ஏனைய நிபந்தனைகளுக்கும் சட்டவிதிகளுக்கும், உள்ளூராட்சி அமையங்களது கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டமூலங்களது ஏற்பாடுகளுக்கும், கலேவெல பிரதேச சபை விதிக்கும் கட்டளைகளுக்கும் இயைபாகச் செயற்படுவதற்கு இணங்குதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பப் படிவங்களைத் தமது நிறுவகத்தின் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் தாமதப்படுத்தும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

இந்த அறவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2012, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கலேவெல பிரதேச சபை, கலேவெல என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
(iv) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று கிராம அலுவலரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.);
(v) ஏற்கனவே இந்த நிறுவகத்தில் பணியாற்றுவதாயின், சேவைச் சான்றிதழ்.

எச். நிமல் குணவர்தன,
செயலாளர்,
கலேவெல பிரதேச சபை.

கலேவெல பிரதேச சபை அலுவலகம்,
கலேவெல,
2012.08.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையின் கலேவெல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள**
**III ஆம் தர வீதித் தொழிலாளர் பதவி**

1. (I) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.
   (II) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் :----.
4. பிறந்த திகதி : ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறான வயது : வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. பால் : (ஆண்/பெண்)
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
8. கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் :- வருடங்கள் :----.
9. பிறப்பினாலா அல்லது பதிவினாலா நீர் இலங்கைப் பிரசை :----.
10. கல்வித் தகைமைகள் :----.
11. ஏனைய தகைமைகள் :----.
12. தொழிற் தகைமைகள் :----.
13. சேவை அனுபவம் :----.
    (i) தற்போது பணியாற்றும் நிறுவனம் :----.
    (ii) தற்போது வகிக்கும் பதவி :----.
    (iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
    (iv) இதற்கு முன்னர் சேவையாற்றிய நிலையத்தில் வகித்த பதவி :----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கமைய இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ நிரூபிக்கப்பட்டால், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***திணைக்களத் தலைவரது உறுதியுரை :***

*விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ....................................... என்பவர் தற்போது இந்த திணைக்களத்தில்/நிறுவகத்தில் .............. ஆகப் பணியாற்றுகின்றார். அவர் குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுவாரெனில், அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும், அவர் எவ்வகையிலேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துவதுடன், அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரைத்து முன்வைக்கிறேன்/முன்வைக்கவில்லை.*

-------,
*திணைக்களத் தலைவரது கையொப்பம்.*

*பெயர் :----.*
*பதவிப் பெயர் :----.*
*திணைக்களத்தின்/நிறுவகத்தின் (பதவி முத்திரை)*
*திகதி :----.*

*9 - 31*

---

**குளியாபிட்டி பிரதேச சபை**

*அரை தொழில்நுட்ப III ஆந் தர பதவிக்காக ஆட்சேர்ப்பு*

*குளியாபிட்டிய பிரதேச சபைக்கு புதிய பதவிகளுக்காக அனுமதிப்படி வெற்றிடமாகியுள்ள அரைப்பங்கு தொழில்நுட்ப பதவி 02 காக பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்காக குளியாபிடிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதியுனர்களிடத்திலிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.*

| 2. | பதவிப்பெயர் | பதவியின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம்- மாதாந்த (அ.நி.சு. 6/2006 (IV) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | இயந்திர நடாத்துனர் | 02 | பொது நிருவாக சுற்று நிரூபம் 6/2006 IV PL 2-2006A ரூபா 12,210-10×130 - 10 × 145 - 10 × 160 - 12×170 - ரூபா 18,600 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு பாடங்களிலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர) நிரந்தர ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை யொன்றில் 8 ஆந் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

*3. **தொழில்நுட்ப அறிவு**.- (அ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பாடசாலை ஒன்றில் அல்லது தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலை நிறுவனம் ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயந்திர தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிச் சான்றிதழ்;*

*(ஆ) திணைக்கள சேவையாளருக்காக சிறு கைத்தொழில் திணைக்களத்தின் இறுதி சான்றிதழ் பத்திர பரீட்சை அல்லது தொழில்நுட்ப வித்தியாலயத்தில் இயந்திர தொழில் நுட்பம் பற்றிய இறுதி பயிற்சி சான்றிதழ்.*

*04.* **தேவையான மற்றும் தகைமைகள்:**

(i) *விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;*

(ii) *விண்ணப்பதாரிகளிடத்தில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு 3 வருடத்திற்கு குறையாத காலம் குளியாபிட்டி பிரதேச சபை அதிகாரப்பிரிவிற்குள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (வாக்குப் பட்டியலில் அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) ;*

(iii) *விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ள இந்த வயது எல்லை கவனத்தில் கொள்வதில்லை) ;*

(iv) *தண்ட நீதி சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெறாதிருத்தல் ;*

(v) *நன்னடத்தையுடனும் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.*

5. **சேர்த்துக் கொள்ளப்படும் முறை**.- நேர்முகப்பரீட்சைக்காக கலந்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் கல்வி தகுதியும் வாய் மூலம் பரிசீலனையின் பெறுபேறுபடி சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. **சேவையில் சேர்வதற்கான ஒப்பந்தம்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. பதவி மூன்று வருட கால நன்னடத்தைக்கு உட்பட்டதாகும் ;

(ii) இந்த சேர்த்துக் கொள்ளும் ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக 2009.05.12 ஆந் திகதி கௌரவ வடமேல் மாகாண ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவை ஒழுங்கு விதிகளுக்கும், நிதிக் கோவைக்கும் அரச திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கும் வடமேல் மாகாண சபை அல்லது வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் விண்ணப்பதாரி உடன்படல் வேண்டும்.

7. **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை**.- (i) எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவப்படி அமைக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2012.09.28 ஆந் திகதிக்கு முன் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், குளியாபிட்டிய பிரதேச சபை, குளியாபிடிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "............... பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களில் பிரதி இணைத்து அனுப்ப வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) விலகளுக்கான சான்றிதழ் ;
(ஈ) வதிவினை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழ் (பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்);
(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற் சான்றிதழ் இரண்டு ;
(ஊ) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

விண்ணப்பப் படிவம் கோரப்பட்டப் பின் அல்லது கோரப்படும்போது இதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பு காலம் தாழ்த்தல், வேறுபடுத்தல் அல்லது திருத்தியமைத்தல் போன்ற பூரண அதிகாரம் குளியாபிடிய பிரதேச சபை செயலாளருக்கு உரியதாகும்.

பீ. எம். குசுமாவதி,
செயலாளர்,
குளியாபிட்டி பிரதேச சபை.

குளியாபிட்டி பிரதேச சபை அலுவலகம்,
குளியாபிட்டி,
2012.08.20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**குளியாபிட்டி பிரதேச சபை**

அரை தொழில்நுட்ப III ஆம் தர பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2012

........................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. கிராம அலுவலர் பிரிவு :----.
5. பிரதேச செயலாளர் பிரிவு :----.
6. மாவட்டம் :----.
7. பிறந்த திகதி : ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
8. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது : வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. பால் : ஆண்/பெண்

10. நீங்கள் இலங்கை பிரஜையா? அப்படியாயின் பரம்பரையாகவா? பதிவு செய்தலினாலா? :----.

11. திருமணமானவரா திருமணமாகாதவரா என்பது பற்றி :----.

12. தேசிய அடையாளஅட்டை இலக்கம் :----.

13. கல்வித் தகைமைகள் :-

க. பொ. த. (சா. த.) பரீட்சை

சித்தியடைந்த வருடமும் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| (1) | |
| (2) | |
| (3) | |
| (4) | |
| (5) | |
| (6) | |
| (7) | |
| (8) | |

10. தொழிற் தகைமைகள் :----.

11. சேவை தகைமை :----.

11.1 தற்போது சேவை செய்யும் நிறுவனம் :----.

11.2 தற்போது வகிக்கும் பதவி :----.

11.3 அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

11.4 இதற்கு முன் சேவை செய்த நிலையமும் பதவியும் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்று இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானது என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்பதையும் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நிறுத்தப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவக தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரி ஆகிய திரு./திருமதி/செல்வி ....................................... தற்போது இந்த திணைக்களத்தில்/நிறுவகத்தில் .............. ஆக சேவை செய்கின்றார். அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும், அவர் எவ்வித முறையிலும் அல்லது ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகி இல்லை என்று இத்துடன் சான்று பகர்கின்றேன்/பகரவில்லை.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.

பதவிப் பெயர் :----.

திணைக்கள /நிறுவனம் :----.

திகதி :----.

9 - 195

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## போரதீவுப்பற்று பிரதேச சபை

*போரதீவுப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடும் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 (1) (2) இன் பிரகாரம் போரதீவுப்பற்று பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ளதும் கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான கிராமங்களை அபிவிருத்தி அடைந்த கிராமங்களாக பிரகடனப்படுத்துவதற்கென 30.06.2011 ஆந் திகதி நடைபெற்ற 38 ஆவது சபைக்கூட்டத்தில் 07 ஆவது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

வி. சிறிதரன்,
தவிசாளர்,
போரதீவுப்பற்று பிரதேச சபை,
வெல்லாவெளி.

| கிராமம் | கிராம சேவையாளர் பிரிவு | இலக்கம் |
|---|---|---|
| பழுகாமம் | (1) பழுகாமம் - 01 | 107 |
| | (2) பழுகாமம் - 02 | 106 |
| | (3) வீரஞ்சேனை | 106 பீ |
| | (4) வன்னிநகர் | 106 டீ |
| போரதீவு | பெரிய போரதீவு | 108 |
| கோவில் போரதீவு | (1) கோவில் போரதீவு | 109 |
| | (2) கோவில் போரதீவு மேற்கு | 109பீ |
| | (3) கோவில் போரதீவு தெற்கு | 109ஏ |
| மண்டூர் | மண்டூர் வடக்கு 1 மற்றும் 2 | 97ஏ |
| | மண்டூர் தெற்கு | 97பீ |
| | மண்டூர் 03 | 96 |
| முனைத்தீவு | முனைத்தீவு | 108ஏ |

*9-07*

---

## ஜா-எல பிரதேச சபை

*பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நுளம்பு மற்றும் நோய் பரப்பும் பூச்சிகள் ஒழிப்பு துணைவிதிகள் அத்துடன் கன கழிவு முகாமைத்துவம் பற்றிய துணைவிதிகளை அமுல்படுத்தலும் வர்த்தமானியில் பிரசுரித்தலும்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடர்நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் வழங்கப்பட்டு, 2011, யூலை 05 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கனகழிவு முகாமைத்துவம் பற்றிய துணைவிதிகளின் 3 ஆம் பிரிவின்கீழ் ஜா-எல பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் வலோத்காரமாக அமுல்படுத்த தகுந்ததெனும் பிரேரணையொன்று 2011, திசெம்பர் 30 ஆந் திகதியன்று நடைபெற்ற நகர சபை பொது கூட்டத்தில் மாண்புமிகு தவிசாளர் லலித் நிசாந்த அபேவிக்ரம அவர்களால் பிரேரிக்கப்பட்டு மாண்புமிகு பிரதேச சபை உறுப்பினர் அதுல ஜயவர்தன அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.*

*மேலும் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து இச்சொல்லப்பட்ட துணைவிதி, ஜா-எல பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் வலோத்காரமாக அமுல்படுத்தப்படுமென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகிறது.*

எல். ஏ. மஞ்சுளா சமன்தி,
செயலாளர்,
ஜா-எல பிரதேச சபை.

ஜா-எல பிரதேச சபை,
கந்தானை.

*9-32*

## வில்கமுவ பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 23 ஆவது பிரிவின் கீழ் இந்தச் சபைக்கு உரித்தான பாதைகளுக்கு மேலதிகமாக மேற்குறித்த சட்டமூலத்தின் 24(1) ஆவது பிரிவின்படி மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச சபை மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் வில்கமுவ பிரதேச சபைக்கு உரித்தானவையென வெளிப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*குறித்த கால எல்லைக்குள் ஏதும் எதிர்ப்புகள் முன்வைக்கப்படாத பட்சத்தில், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் அனைத்தும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 24(5) ஆவது பிரிவின்படி உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வில்கமுவ பிரதேச சபைக்கு உரித்தாக்கிப் பராமரிக்கப்படும் என்பது அனைவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

டபிள்யு. எம். ஜயந்த குமார வீரசேக்கர,
தலைவர்,
வில்கமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வில்கமுவ.
*2012, யூன் 28.*

### அட்டவணை

| தொடர் இல. | பாதை இலக்கம் | .வர்த்தமானி இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | பாதையின் உரித்து அடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | CMWGE 246 | | நாமினிகம கமமெத பிரதான வீதி | நிபொன் பிரதான வீதி | குருவெலயாய கமமெத பாதை | | | 50 |
| 02 | CMWGE 246 | | குருவெலயாய பிரதான வீதி | தேவககிரிய ஹந்துன்கமுவ பிரதான வீதி (குருவலயாய மயானம் அருகில்) | குருவெலயாய கங்கேயாய சந்தி | 4.10 | 4 | 50 |
| 03 | CMWGE 234 | | பத்கம்பல நுககொல்ல பிரதான வீதி | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதி ராஜா முதலாளியின் கடை அருகில் | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதி கிராம அலுவலர் திரு. செனவிரத்ன வின் வீடு வரை (நுககொல்ல பாடசாலை அருகில்) | 3.00 | 4 | 50 |
| 04 | CMWGE146 | | 4 வாய்க்கால் பிரதான வீதி | ஹந்துன்கமுவ பிரதான வீதி (4ஆம் வாய்க்கால் சந்தி) | ஹந்துன்கமுவ திசாநாயக்கவின் வீடு | 2.30 | 4 | 50 |
| 05 | CMWGE 213 | | வெஹரகல பன்சல வீதி | உடபார ஹந்துன்கமுவ பிரதான வீதி 2 ஆம் வாய்க்கால் சந்தி) | | 2.60 | 4 | 50 |
| 06 | CMWGE 222 | | சோனுத்த பாடசாலை அருகிலிருந்து நிபொன் வீதி வரை | சோனுத்த பாடசாலை | திரு. முதலிஹாமியின் வீட்டு அருகில் | 2.50 | 4 | 50 |
| 07 | CMWGE 254 | | டீ.57 வாய்க்கால் கரவ்கஹவெவ வீதி | மாரக்க ஆஸ்பத்திரி சந்தி | வண்டுகடை அருகில் டீ 57 வாய்க்கால் அருகில் | 3.40 | 4 | 50 |

| தொடர் இல. | பாதை இலக்கம் | .வர்த்தமானி இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | பாதையின் உரித்து அடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08 | CMWGE 065 | | மல்கம்மன பிரதான வீதி | புவக்பிட்டிய கடை அருகில் ஹெட்டிபொல மாரக்க பிரதான வீதி | குருவெலயாய கங்கேயாய சந்தி | 3.90 | 4 | 50 |
| 09 | CMWGE 234 | | ரந்துனேவெவ பிரதான வீதி | விக்ரம கடை அருகில் | திரு. தர்மசேனவின் வீட்டு அருகில் | 3.80 | 4 | 50 |
| 10 | CMWGE 078 | | மாரக்க கங்கேயாய வீதி | மாரக்க ஆஸ்பத்திரி சந்தி | மல்கம்மன கங்கேயாய சந்தி | 6.00 | 4 | 50 |
| 11 | CMWGE 111 | | நுவரயாய பிரதான வீதி | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியின் லேடியன்கல பன்சல சந்தி | கும்புக்கந்தன கலஹிட்டிய பாலம் வரை | 4.30 | 4 | 50 |
| 12 | CMWGE 030 | | வீரகொல்ல மொரகஹஉல்பத்த வீதி | மாத்தளை ஹெட்டிபொல பிரதான வீதியில் வீரகொல்ல சந்தி | மொரகஹஉல்பத்த பன்சல வரை | 4.00 | 4 | 50 |
| 13 | CMWGE 158 | | வெஹெரகலயாய பிரதான வீதி | ஹேட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியில் மலே முதலாளியின் கடை அருகில் | ஹிமிபிலியாகடஓய வரை | 5.50 | 4 | 50 |
| 14 | CMWGE 209 | | ஹந்துன்கமுவ நூல்நிலைய வீதி | திரு. ஓபயவின் கடை அருகில் | பிரியந்த உறுப்பினரது வீட்டு அருகில் | 1.20 | 4 | 50 |
| 15 | CMWGE 187 | | கும்புக்ஓயா பிரதான வீதி | ஹந்துன்கமுவ போகஹவெவ முதலாளியின் கடை அருகில் | 18 ஆம் பிரிவு ஓபய இனது கடை அருகில் | 2.80 | 4 | 50 |
| 16 | CMWGE 073 | | டி 57 வாய்க்கால் போகஹவெவ வீதி | டி 57 வாய்க்கால் திரு. வில்பட் இனது வீட்டு அருகில் | போகஹவெவ பஸ் தரிப்பிடம் அருகில் | 2.70 | 4 | 50 |
| 17 | CMWGE 209 | | டி 43 பிரதான வீதி | டி 43 வாய்க்கால் அருகில் | திரு. அமரசிரி இனது வீட்டு அருகில் சந்தி | 6.70 | 4 | 50 |
| 18 | CMWGE 006 | | ஹெட்டிபொல சுற்றுவட்ட வீதி | கந்தேகெதர ஹாட்வெயார் | பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கடை அருகில் சந்தி | 1.52 | 4 | 50 |
| 19 | CMWGE 209 | | துனுவிலபிட்டிய பிரதான வீதி | ஹெட்டிபொல மாரக்க ஊடாக ஹந்துன்கமுவ வீதியில் மெதகந்த கூட்டுறவுக்கடை அருகிலுள்ள சந்தி | மகாவலி கங்கை | 2.0 | 4 | 50 |
| 20 | CMWGE 012 | | திவுல்கஸ்யாய கொடஉல்பத்த வீதி | ஹெட்டிபொல கலாசார நிலையம் அருகில் | ஆங்கில முன்பள்ளி அருகில் | 0.90 | 4 | 50 |
| 21 | CMWGE 013 | | கொடஉல்பத்த வீதி | திரு. எல். பி. ஏக்கநாயக்கவின் வீட்டு அருகில் | கொடஉல்பத்த குணுஎல | 2.70 | 4 | 50 |
| 22 | CMWGE 103 | | அக்கரகால கம பிரதான வீதி | மாரக்க பிரதான வீதியில் அக்கரகால பஸ் தரிப்பிடம் | கெம்புறுஓயா எல | 1.70 | 4 | 50 |

| தொடர் இல. | பாதை இலக்கம் | .வர்த்தமானி இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | பாதையின் உரித்து அடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | CMWGE 008 | | பொது மலகூடம் அருகிலுள்ள வீதி | ஹெட்டிபொல பிரதான பஸ் நிலையம் | திருமதி ஈ. எம். அனுலாவதி இனது வீட்டு அருகில் | 0.30 | 4 | 50 |
| 24 | CMWGE 027 | | புவக்பிட்டிய கடை அருகிலுள்ள வீதி | புவக்பிட்டிய கடை அருகில் | போகஹவெவ சந்தலேகா அரிசி ஆலை அருகில் | 1.70 | 4 | 50 |
| 25 | CMWGE 197 | | ரத்கரல்லாவ பாதை | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ வீதி நாமினிஓயா திருமதி சந்திராவதியின் வீட்டு அருகில் | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ வீதியில் ஹரமிட்டிகால சந்தி | 2.00 | 4 | 50 |
| 26 | CMWGE 027 | | டி 57 வாய்க்கால் மயான வீதி | டி 57 வாய்க்கால் போதிய அருகில் அனுர முதலாளியின் கடை அருகில் | மாரக்க குளத்தருகில் திரு. நிமல் இனது கடை அருகில் | 2.70 | 4 | 50 |
| 27 | CMWGE 175 | | புஸ்ஸல்லயாய பிரதான வீதி | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியில் புஸ்ஸல்லயாய மயான சந்தி | கரவ்கஹவெவ அருகில் வரை | 3.20 | 4 | 50 |
| 28 | CMWGE 178 | | டொப்வலபிட்டிய பிரதான வீதி | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியில் 1 ஆவது வாய்க்கால் சந்தி | திரு. ஓபய இனது கடை அருகில் | 2.50 | 4 | 50 |
| 29 | CMWGE 179 | | டொப்வலபிட்டிய கமமெத வீதி | ஹந்துன்கமுவ பொலிஸ் அருகிலிருந்து | ஹந்துன்கமுவ மயானம் அருகில் வரை | 1.90 | 4 | 50 |
| 30 | CMWGE 034 | | மொரகஹஉல்பத்த நாகொல்ல வீதி | மாத்தளை ஹெட்டிபொல வீதியில் வட்டகல சந்தி | மொரகஹ உல்பத்த விலங்குப்பண்ணை அருகில் | 2.25 | 4 | 50 |
| 31 | CMWGE 036 | | நாகொல்ல சங்க மாவத்த | மாத்தளை ஹெட்டிபொல பிரதான வீதியில் திரு. சுமனரத்னவின் கடை அருகில் | நாகொல்ல கமமெத வீதியின் சந்தி | 0.50 | 4 | 50 |
| 32 | CMWGE 115 | | எக்கிரிய கடை அருகிலிருந்து டி 57 வாய்க்கால் வீதி | எக்கிரிய கடை அருகில் | டி 57 வாய்க்கால் திரு. ருத்நாயக்க இனது கடை அருகில் | 1.00 | 4. | 50 |
| 33 | CMWGE 176 | | புஸ்ஸல்லாவ பன்சல அருகிலுள்ள பாதை | புஸ்ஸல்லாவ பன்சல அருகில் | கரவ்கஹவெவ | 3.20 | 4 | 50 |
| 34 | CMWGE 036 | | எகொட தேவகிரிய பிரதான வீதி | மாரக்க ஹந்துன்கமுவ பிரதான வீதியில் எகொட தேவகிரிய மின் பிறப்பாக்கி அருகில் | நாமினிகம கமமெத வீதியில் எஹலந்த சந்தி | 4.00 | 4 | 50 |
| 35 | CMWGE 199 | | நிபொன் கங்கசிரிகம பாதை | பேரகனத்த வாரச்சந்தை அருகில் பஸ் தரிப்பிடம் வரை | வனவிலங்கு காப்பகம் வரை | 2.00 | 4 | 50 |

| தொடர் இல. | பாதை இலக்கம் | .வர்த்தமானி இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | பாதையின் உரித்து அடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 36 | CMWGE 052 | | பிதுருவெல்ல பிரதான வீதி | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான டி56 வாய்க்கால் அருகில் | திரு. சிரிமான்ன இனது கடை வரை | 2.80 | 4 | 50 |
| 37 | CMWGE 121 | | கெம்புறுஓயா பாதை | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியில் லேடியன்கல உப அஞ்சலகம் அருகில் | ஹெட்டிபொல ஹந்துன்கமுவ பிரதான வீதியில் லேடியன்கல உப அஞ்சலகம் அருகில் | 1.30 | 4 | 50 |
| 38 | CMWGE 039 | | அலிகந்த மொரகஹஉல்பத்த வீதி | உணகொல்ல அலிகந்த வீதியில் மொரகஹஉல்பத்த சந்தி | மொரகஹஉல்பத்த கமமெத சந்தி | 1.80 | 4 | 50 |
| 39 | CMWGE 227 | | பேரகனத்த கமமெத இடைப் பாதை | பேரகனத்த பிரதான சந்தி | நிப்பொன் வீதி (சோனுத்த வெலமெத சந்தி) | 1.50 | 4 | 50 |
| 40 | CMWGE 047 | | எகொட தேவகிரிய புதிய பாதை | எகொடதேவகிரிய புத்தர் சிலைச் சந்தி அருகில் | வயல் | 1.00 | 4 | 50 |
| 41 | CMWGE 020 | | டி 42 பிரதான வீதி | ஹெட்டிபொல ஹசலக்க பிரதான வீதியில் ருவன கடை அருகிலிருந்து | ஹீன்கங்கை வரை | 2.66 | 4 | 50 |
| 42 | CMWGE 130 | | துனுவிலபிட்டிய கமமெத வீதி | ஹெட்டிபொல மாரக்க ஊடாக ஹந்துன்கமுவ வீதியில் திரு. பஸ்நாயக்க இனது வீட்டு அருகில் | துனுவிலபிட்டிய முன்பள்ளி அருகில் | 1.20 | 4 | 50 |
| 43 | CMWGE 064 | | குருவெலயாய கங்கேயாய பாதை | குருவெலயாய கங்கேயாய சந்தி | மகாவலிகங்கை வரை | 1.0 | 4 | 50 |
| 44 | CMWGE 065 | | கரவ்கஹவெவ மஹவத்த வீதி | மாரக்க நூல்நிலையம் அருகில் | திரு. டீ. எம். கிரிபண்டா இனது வீட்டு அருகில் | 3.90 | 4 | 50 |
| 45 | CMWGE 099 | | ரந்துன்னேவெவ கங்கேயாய வீதி | ரந்துன்னேவெவ போதிய அருகிலிருந்து | கெமுறுஓய தெமோதர | 3.00 | 4 | 50 |
| 46 | CMWGE 225 | | கங்கசிரிகம தெற்கு வீதி | வில்கமுவ நிபொன் பிரதான வீதியில் கங்கசிரிகம பஸ் தரிப்பிடம் அருகில் | மகாவலி கங்கை | 3.00 | 4 | 50 |
| 47 | CMWGE 256 | | துனுவிலபிட்டிய ஆற்றுத்திசையில் இடதுபுற வீதி | துனுவிலபிட்டிய கங்கேயாய சந்தி | மகாவலி கங்கை | 1.00 | 4 | 50 |
| 48 | CMWGE 257 | | மாரக்க கங்கேயாய இடதுபுற வீதி | மாரக்க கங்கேயாய திரு. சமரசூரிய இனது கடை அருகிலுள்ள சந்தி | ரந்துன்னேவெவ் மயானம் வரை | 3.00 | 4 | 50 |
| 49 | CMWGE 257 | | டி 54 வாய்க்கால் வீதி | நாமினிஓய சர்வோதய வங்கி அருகில் | திரு. ஆர். எம். குமாரசிங்ஹஇனது கடை வரை | 0.35 | 4 | 50 |
| 50 | CMWGE 200 | | விகாரகம கமமெத பாதை | ஹந்துன்கமுவ பொலிஸ் நிலையம் சந்தியில் | ஹந்துன்கமுவ பன்சல அருகில் சந்தி வரை | 1.7 | 4 | 50 |

## ரம்புக்கனை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச சபை 2012.02.28 ஆந் திகதி நடாத்திய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிதலுக்கு ஏற்ப ரம்புக்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கையுடன் சம்பந்தப்பட்ட காணிகளில் வசிக்கின்ற காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமாக விருப்பத்திற்கேற்ப அதனதன் முன்னுள்ள நீள அகலங்களுக்கேற்ப சபைக்குச் சொந்தமாகுமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகள் அகலமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால் எதிர்ப்பதற்கான காரணத்தினை குறித்த ஆவணமொன்றை இரு பிரதிகளாக இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்புவதற்கு அதிகாரம் உள்ளது எனவும், குறித்த காலத்தினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன்பின் அவ்வீதிகள் பிரதேச சபைக்குச் சொந்தமான ஒரு சொத்தாகக் கருதப்பட்டு அவரவர்களுக்கு முன்னால் உள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப் படுகின்றது.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தலைவர்,*
*ரம்புக்கனை பிரதேச சபை.*

***வீதிகளின் விபரம் :***

| | |
|---|---|
| *நீளம்* | *அகலம்* |
| *270 மீற்றர்* | *03 மீற்றர்* |

*கிராம அலுவலர் பிரிவு : 3 டி. ஹேவாதிவெல*
*வீதியின் பெயர் : எபோஸ்தலிக தேவாலய வீதி*

*பிடவலயிலிருந்து ஆரம்பித்து இடப்பக்கமாக பீ. எம். போகஹவத்த என்பவருக்குச்சொந்தமான நில்வெல்கொல்ல வத்த, எரன் கிரேஷன் சந்திரசேகர என்பவருக்குச் சொந்தமான கொரஸவத்த பீ. ஓ. குணரத்தின என்பவருக்குச் சொந்தமான நியதகலவத்த, ஜீ. வீடா கமலாவதீ என்பவருக்குச்சொந்தமான கொரஸவத்த எனும் காணிகளுக்கு எல்லையாவதும்.*

*வலப்பக்கத்தில் கே. எம். ஏ. டீ. உமயங்கனீ மற்றும் பீ. ஓ. குணரத்தின என்பவர்களுக்குச் சொந்தமான நியதகலவத்த, சஞ்ஜீவ தனங்ஜய லக்ருவன், எரன் கிரேஷன் சந்திரசேகர, பீ. பொடிசிஞ்ஞோ என்பவர்களுக்குச் சொநத்மான மஹகொரஸவத்த எனும் காணிகளுக்கு எல்லையாகும் எபோஸ்தலிக தேவாலயம் வரையிலான வீதி.*

*0-240/1*

---

## ரம்புக்கனை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச சபை 2012.02.28 ஆந் திகதி நடாத்திய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிதலுக்கு ஏற்ப ரம்புக்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கையுடன் சம்பந்தப்பட்ட காணிகள் வசிக்கின்ற காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமாக விருப்பத்திற்கேற்ப அதனதன் முன்னுள்ள நீள அகலங்களுக்கேற்ப சபைக்குச் சொந்தமாகுமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகள் அகலமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால் எதிர்ப்பதற்கான காரணத்தினை குறித்த ஆவணமொன்றை இரு பிரதிகளாக இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்புவதற்கு அதிகாரம் உள்ளது எனவும், குறித்த காலத்தினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் அந்த வீதிகள் பிரதேச சபைக்குச் சொந்தமான ஒரு சொத்தாகக் கருதப்பட்டு அவரவர்களுக்கு முன்னால் உள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தலைவர்,*
*ரம்புக்கனை பிரதேச சபை.*

**வீதிகளின் விபரம் :**

| | |
|---|---|
| *நீளம்* | *அகலம்* |
| *270 மீற்றர்* | *2.5 மீற்றர்* |

*கிராம அலுவலர் பிரிவு* : *கிரிவன்தெனிய*
*வீதியின் பெயர்* : *மஹஓய எல்லவல வரையிலான வீதி*

*வெலிகந்த, எக்ஸத் மரணாதார சங்க மண்டபத்தில் ஆரம்பித்து இடப்பக்கத்தில் ஜே. டி. சிறில் குணவர்தன, வை. ஜீ. அஜீத் லால் என்பவர்களுக்குச் சொந்தமான ஈரியகொல்ல காணி, எம். ஏ. சிறிசேன என்பவருக்குச் சொந்தமான உபாஸகதெனிய காணியும், டி. எம். சுது மெணிகே, பி. ஜீ. லீலாவதி என்பவர்களுக்குச் சொந்தமான முதாகஹமுலதெனிய காணியில் எல்லையாவதும்*

*வலப்பக்கத்தில் ஜே. டி. சிறில் குணரத்தின என்பவருக்குச சொந்தமான பொல்வத்த, எம். ஏ. சிறிசேன என்பவருக்குச் சொந்தமான உபாஸக தெனிய பில்லேவ, டி. எம். சுது மெணிகே மற்றும் பீ. ஜீ. லீலாவதி என்பவர்களுக்குச் சொந்தமான முதாகஹமுலதெனிய எனும் காணிகளில் எல்லையாகும் எல்லேவல மஹஒய வீதியில் முடிவடைகின்ற மாஓயா எல்லாவல வீதி.*

*9-240/2*

---

**ரம்புக்கனை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச சபை 2012.03.27 ஆந் திகதி நடாத்திய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிதலுக்கு ஏற்ப ரம்புக்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கையுடன் சம்பந்தப்பட்ட காணிகளில் வசிக்கின்ற காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமான விருப்பத்திற்கேற்ப அதனதன் முன்னுள்ள நீள அகலங்களுக்கேற்ப சபைக்குச் சொந்தமாகுமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகள் அகலமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால் எதிர்ப்பதற்கான காரணத்தினை குறித்த ஆவணமொன்றை இரு பிரதிகளாக இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்புவதற்கு அதிகாரம் உள்ளது எனவும், குறித்த காலத்தினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் அந்த வீதிகள் பிரதேச சபைக்குச் சொந்தமானஒரு சொத்தாகக் கருதப்பட்டு அவரவர்களுக்கு முன்னால் உள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தலைவர்,*
*ரம்புக்கனை பிரதேச சபை.*

**வீதிகளின் விபரம் ?**

| | |
|---|---|
| *நீளம்* | *அகலம்* |
| *175 மீற்றர்* | *03 மீற்றர்* |

*கிராம அலுவலர் பிரிவு* : *11 பீ, துனுகேவல*
*வீதியின் பெயர்* : *ஹேதல மாவத்த*

*ஓவிடாவாரயில் ஆரம்பித்து இடப்பக்கமாக ஹேதல ஓடையும்*

*வலப் பக்கமாக டபிள்யூ. டி. பியதாஸ என்பவருக்குச் சொந்தமான முருதகஹமுலலியத்த, டப். டி. பியதாஸ, வீ. சுமனதாச, வீ. மதுருசிங்ஹ, வீ. சிரியாவதீ, வீ. மாலனீ, வீ. மாலா தமயன்தி, டப். டி. பத்மாவதீ, டப். டி. தர்மதாஸ, ஜே. டி. விமலசேன, டப். டி. தயாவதீ, ஏ. நந்தாவதீ, டப். டி. சோமபால, டப். டி. ஜயதிலக, டப். டி. கமலசேன, டப். டி. விமலரத்தின, டப். எம். பீ. இந்திராணி, எச். எம். ஹேரத் மெணிகே, கே. எம். அஷோக தர்மசிறி என்பவர்களுக்குச் சொந்தமான ஜம்புகஹாமுலலியத்த, டப். டி. கருணாவதீ, டப். டி. சந்திராவதீ, டப். டி. குசுமாவதீ, எம். டி. பிரியங்கா, அத்தனாயக, டப். டி. அல்விஸ், டப். டி. உதயகுமார, டப். டி. எஸ். தர்மசேன, ஆர். டி. பியசீலி ராஜபக்ஷ, டப். டி. கருணாதாஸ, டப். டி. திலகரத்தின, டப். டி. விமலரத்தின, டப். டி. சொய்சா என்பவர்களுக்குச் சொந்தமான நாவதே வயலை எல்லையாகக் கொண்ட ஹேதலின் முடிகின்ற ஹேதல் மாவத்த.*

*9-240/3*

**ரம்புக்கனை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச சபை 2012.03.27 ஆந் திகதி நடாத்திய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிதலுக்கு ஏற்ப ரம்புக்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கையுடன் சம்பந்தப்பட்ட காணிகளில் வசிக்கின்ற காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு வழங்கப்பட்ட எழுத்து மூலமாக விருப்பத்திற்கேற்ப அதனதன் முன்னுள்ள நீள அகலங்களுக்கேற்ப சபைக்குச் சொந்தமாகுமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகள் அகலமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால் எதிர்ப்பதற்கான காரணத்தினை குறித்த ஆவணமொன்றை இரு பிரதிகளாக இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்புவதற்கு அதிகாரம் உள்ளது எனவும், குறித்த காலத்தினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் அந்த வீதிகள் பிரதேச சபைக்குச் சொந்தமான ஒரு சொத்தாகக் கருதப்பட்டு அவரவர்களுக்கு முன்னால் உள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தலைவர்,*
*ரம்புக்கனை பிரதேச சபை.*

**வீதிகளின் விபரம் :**

| | |
|---|---|
| *நீளம்* | *அகலம்* |
| *420' - 00" அடி* | *10' - 00" அடி* |

| | |
|---|---|
| *கிராம அலுவலர் பிரிவு* | : இலக்கம் 02 சீ தும்புல்ல |
| *வீதியின் பெயர்* | : கெசெல்வத்த வீட்டின் ஊடாக உடுவெவ வரையிலான வீதி |

*கணுகெடிய வயல் அருகில் ஆரம்பித்து இடப்பக்கமாக, டி. கருணாரத்தின, டி. எஸ். உதயரத்தின என்பவர்களுக்குச் சொந்தமான கணுகெடிய வயலாலும்,*

*வலப்பக்கமாக டி. எஸ். உதயரத்தின என்பவருக்குச் சொந்தமான கணுகெடிய வயலாலும் எல்லைப்படுத்தப்படுகின்ற கெசெல்வத்த வீடு ஊடாக உடுவெவ வரையிலான வீதி.*

*9-240/4*

---

**கேகாலை நகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

*இதன் கீழ் உப அட்டவணையில் காணப்படும் பெயர் குறிப்பிட்டுள்ளவரது பெயருக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள களியாட்ட விடுதியை அந்த இடத்தில் நடாத்திச் செல்வதற்கு 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பப்பத்திரம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் 06 ஆம் இலக்க பிரதிக்கினையின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இக்களியாடட விடுதிக்கண்மையிலோ, களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கண்மையிலோ வதியும் ஒருவரால் அந்தக் களியாட்ட விடுதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் தமது ஆட்சேபனைக்கான காரணத்தை எழுத்து மூலம் அறிவிப்பதோடு அதனை இரு பிரதிகளுடன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*ஜீ. கே. சமரசிங்ஹ,*
*தவிசாளர்,*
*கேகாலை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கேகாலை,*
*2012.08.14.*

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர், முகவரி | களியாட்ட விடுதியின் தவிசாளர்/ செயலாளர் | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதியின் புதிய நடவடிக்கைகளுக்கான அதிகாரமும்/இடமும் |
|---|---|---|---|
| மைத்திரி அதுருபான, 343/7, ரங்வல, கேகாலை | செயலாளர் | கேகாலை பெருந்தோட்ட விளையாட்டுக் கழகம் | இல. 39, கலான ஜயனதை மாவத்தை, கேகாலை |

9-90

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2012 |
| | | வெள்ளி | 14.09.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.08.2012 |
| | | வெள்ளி | 21.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2012 |
| | | வெள்ளி | 28.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2012 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2012 |
| | | வெள்ளி | 12.10.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.09.2012 |
| | | வெள்ளி | 19.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2012 |
| | | வியாழன் | 25.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2012 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2012 |
| | | வெள்ளி | 09.11.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 25.10.2012 |
| | | வெள்ளி | 16.11.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2012 |
| | | வெள்ளி | 23.11.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2012 |
| | | வெள்ளி | 30.11.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2012 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*